# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2260/63 - 2021 දෙසැම්බර් මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.12.30

*2260/63 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 1/ 98(ii)(அ)*

**1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரண சபைச் சட்டம்**

*1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படுவதாகிய அச்சட்டத்தின் 53 ஆம் பிரிவின்கீழ் கைத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**விமல் வீரவங்ச,**
கைத்தொழில் அமைச்சர்.

கொழும்பு,
*2021, திசெம்பர் மாதம் 29.*

**ஒழுங்குவிதிகள்**

*2021, யூன் 18 ஆந் திகதிய 2232/ 36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 2020, மாச்சு மாதம் 2 ஆந் திகதிய 2165/2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இரத்தினக்கல், ஆபரண (உரிமக் கட்டணம்) ஒழுங்குவிதிகள், அவற்றின் அட்டவணையில் தொடர் இலக்கத் தலைப்பின்கீழ் 13.1, 13.4 மற்றும் 13.8 என்பவற்றையும் முறையே "விவரணம்" மற்றும் "கட்டணங்கள்" என்னும் தலைப்புகளின் கீழ் நிரல் I மற்றும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவுகளையும் நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றன:-*


1A - PG 5674 — 510 (2021/12)



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| | நிரல் I | நிரல் II | |
|---|---|---|---|
| தொடர் இல. | விவரணம் | கட்டணங்கள் | |
| | | நிகழ்நிலை மூலம் | உருப்படியான சோதனை |
| 13.1 | (i) இரத்தினக்கல் மற்றும் ஆபரண அனுப்புபொருட்டொகுதியை ஏற்றுமதிசெய்தல் (200 ஐ. அ. நா டொலருக்குக் குறைந்த கப்பற்றளம் வரையிலான பெறுமதி) | கட்டணமில்லை | கட்டணமில்லை |
| | (ii) இரத்தினக்கல் மற்றும் ஆபரண அனுப்புபொருட்டொகுதியை ஏற்றுமதிசெய்தல் (ஐ. அ. நா டொலர் 201 இற்கும் ஐ. அ. நா. டொலர் 1000 இற்கும் இடையிலான கப்பற்றளம் வரையிலான பெறுமதி (இரண்டும் உட்பட) | ரூபா 500 | ரூபா 1000 |
| | (iii) இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களை ஏற்றுமதிசெய்தல் (ஐ.அ.நா. டொலர் 1001 இற்கும் ஐ.அ.நா டொலர் 3000 இற்கும் இடையிலான கப்பற்றளம் வரையிலான பெறுமதி (இரண்டும் உட்பட) | ரூபா 1500 | ரூபா 3000 |
| | (iv) இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களை ஏற்றுமதிசெய்தல் (ஐ. அ. நா. டொலர் 3001 இற்கு மேற்பட்ட கப்பற்றளம் வரையிலான பெறுமதி) | மேற்கொண்டு தொடர்வதற்கு அனுமதிக்கப் படவில்லை | ரூபா 2000 + ஏற்றுமதி விலைப்பட்டியலிலுள்ள கப்பற்றளம் வரையிலான பெறுமதியின் 0.25% |
| 13.4 | காட்சிக்கான ஏற்றுமதிச் சேவைக் கட்டண தள்ளுபடி வசதி - நிருவாக விதிப்பனவுகள் | பொருட்கள் திருப்பியனுப்பப்பட்ட பின்னர் விற்கப்பட்ட பொருட்களின் கப்பற்றளம் வரையிலான பெறுமதியின் மீது 0.25 அதிகபட்ச சதவீதமொன்றாக கணக்கிடப்பட்ட முன்கூட்டிய கட்டணமொன்றாக ரூபா 15,000 விதிக்கப்படுதல் வேண்டும்<br><br>செலுத்தப்படற்பாலதான உள்ளபடியான விதிப்பனவுகளுக்கு எதிராக ரூபா 15,000 எதிரீடு செய்யப்படுதல் வேண்டும்.<br><br>(முழுமையான திரும்புதல்கள் அல்லது உள்ளபடியான விதிப்பனவுகள் ரூபா 15,000 இற்கு குறைவாக இருக்கும் பட்சத்தில் அத்தொகை வைத்திருக்கப்படுதல் வேண்டும்) | |
| 13.8 | முழுமையாக திருப்பியனுப்பப்பட்டவைகளுக்காக (தனிப்பட்ட செய்துகாட்டுகை வகுதி சிப்பங்கள்) | ரூபா 3000<br>ஏற்றுமதித் தேதியிலிருந்து 180 நாட்களினுள் அந்தந்த ஏற்றுமதியை முன்வைப்பதற்கு தவறுகின்ற பட்சத்தில் விலைப்பட்டியின் கப்பற்றளம் வரையிலான பெறுமதியிலிருந்து 0.5 சதவீதம் விதிக்கப்படுதல் வேண்டும். | |

EOG 12-0342